அரசு ஊழியர்களாக ஆக்கிக் காட்டியவர் எங்களுடைய மாண்புமிகு தளபதியார் என்பதை மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வேண்டுமானல் ஒரு பட்டிமன்றத்தை வைத்துகூட வாதிடலாம். இந்த ஆதி திராவிட மக்கள் சமுதாயமும், இந்தப் பழங்குடியின மக்கள் சமுதாயமும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோதெல்லாம்தான் மேன்மையடைந்திருக்கின்றது என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த மரியாதைக்குரிய நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் 6-7-2009 திங்கட்கிழமையன்றும் தொடரும். (குறுக்கீடு) என்ன மிரட்டுகிறீர்கள், என்ன பேசுகிறீர்கள், அதற்கு ஒரு முறை இல்லையா? (குறுக்கீடு) யார்? பதில் சொல்வதற்குத்தான் அமைச்சர் இருக்கிறார்; நீங்களா பதில் சொல்வீர்கள்? அதெல்லாம் திங்கட்கிழமை சொல்லிக்கொள்ளலாம்.

6-7-2009 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 6-7-2009, திங்கட்கிழமையன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

6-7-2009 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (6-7-2009) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

72. மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

73. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

74. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)